*59*

# இரண்டாம் வருகை

## (24:36-51)

*எருசலேமின் அழிவைக் குறித்து இயேசு தமது சீஷர்களுக்கு அறிவித்தபின் அவர் தமது இரண்டாம் வருகையை குறித்து அவர்களிடம் பேசினார்.*

### *"நேரத்தை ஒருவரும் அறியார்" (24:36-41)*

***36**அந்த நாளையும் அந்த நாழிகையையும் என் பிதா ஒருவர் தவிர மற்றொருவனும் அறியான்; பரலோகத்திலுள்ள தூதர்களும் அறியார்கள்.*
***37**நோவாவின் காலத்தில் எப்படி நடந்ததோ, அப்படியே மனுஷகுமாரன் வரும்காலத்திலும் நடக்கும்.*
***38**எப்படியெனில், ஜலப்பிரளயத்துக்கு முன்னான காலத்திலே நோவா பேழைக்குள் பிரவேசிக்கும் நாள்வரைக்கும், ஜனங்கள் புசித்தும் குடித்தும், பெண் கொண்டும் பெண் கொடுத்தும்,*
***39**ஜலப்பிரளயம் வந்து அனைவரையும் வாரிக்கொண்டுபோகுமட்டும் உணராதிருந்தார்கள்; அப்படியே மனுஷகுமாரன் வருங்காலத்திலும் நடக்கும்.*
***40**அப்பொழுது, இரண்டு பேர் வயலில் இருப்பார்கள்; ஒருவன் ஏற்றுக்கொள்ளப்படுவான்; ஒருவன் கைவிடப்படுவான்.*
***41**இரண்டு ஸ்திரீகள் ஏந்திரம் அரைத்துக் கொண்டிருப்பார்கள்; ஒருத்தி ஏற்றுக்கொள்ளப்படுவாள், ஒருத்தி கைவிடப்படுவாள்.*

***வசனம் 36.*** எருசலேமின் அழிவைக் குறித்த தலைப்பை விட்டு விட்டு, இயேசு தமது முழுக்கவனத்தையும் இரண்டாம் வருகையைக்குறித்து பேசுவதற்கு செலுத்துகிறார். **அந்தநாளையும் நாழிகையையும் என் பிதா ஒருவர் தவிர மற்றொருவனும் அறியான்; பரலோகத்திலுள்ள தூதர்களும் அறியார்கள், குமாரனும் அறியார்** என்று இயேசு சொன்னார். அவர் மீண்டும் வருவது எப்போது அல்லது உலகத்தின் முடிவுகாலம் எப்போது வரும் என்பது குறித்து இயேசு தெளிவாகக் குறிப்பிட்டார். முடிவு காலம் எப்பொழுது என்பது குறித்து கணக்கிடுவோர் அல்லது முன்னுரைப்போர் நேரத்தை வீணடிப்பதில் தங்கள் பிரயாசங்களை செலவிடுகின்றனர்.

இயேசு சர்வ வியாபியும் தேவனுமாயிருந்த போதிலும், முடிவு காலத்தை அறிந்து கொள்வதிலிருந்து அவர் தம்மை விலக்கிக் கொண்டார். குமாரனும் தமது சொந்த வருகையைக் குறித்து அறியார் என்று சொல்லுவது அநேக ஜனங்களுக்கு ஆச்சரியத்தைக் கொடுக்கிறது.[1] "வார்த்தை மாம்சமாகி" வந்தபோது (யோவான் 1:14) அவர் தொடர்ந்து தெய்வீகமுள்ளவராக இருந்தார், ஆனால் அவர் தமது சர்வ ஞானத்தை

செயல்படுத்தும்படி தெரிந்துகொள்ளவில்லை. (காண்க பிலிப்பியர் 2:6, 7). இயேசு வளரும் போது மாம்ச சரீரத்தில் மட்டுமல்லாது ஞானத்திலும் வளர்ச்சியடைந்தார் (லூக்கா 2:52). அவருடைய ஊழியத்தின் தொடக்கத்தில் பரிசுத்த ஆவியின் அபிஷேகம் பெற்ற பின்பு (3:16; லூக்கா 4:18; நடபடிகள் 10:38), அநேக நிகழ்ச்சிகளில் அவர் தமது அற்புத அறிவை பயன்படுத்தினார். ஆகிலும் அவர் எப்பொழுதும் அப்படிச் செய்யவில்லை. Robert H. Gundry பின்வருமாறு இதைக் காணுகிறார்:

> இயேசு தமது சர்வ வல்லமையை எப்பொழுதும் பயன்படுத்தாமல் ராஜ்யத்தின் பரவுதலுக்காக மட்டுமே பயன்படுத்தினார் (உதாரணம் கல்லை அப்பங்களாக்க அவர் மறுத்தார்), எனவே அவர் தமது இராஜ்யத்தின் பரவுதலுக்காகவேயன்றி தமது சர்வ ஞானத்தைப் பயன்படுத்தவில்லை. அவர் தமது வருகையின் சரியான காலத்தை அறிந்து கொள்ளவும் அறியச்செய்யவும் முயற்சித்திருப்பாரானால் இடைப்பட்ட காலத்தில் கவனக் குறைவை ஊக்கப்படுத்தி ராஜ்யத்திற்கு சேதத்தை ஏற்படுத்தியிருக்கக் கூடும்.[2]

**வசனங்கள் 37-39.** அடுத்ததாக இயேசு **மனுஷகுமாரனுடைய** [திடீர்] **வருகையை நோவா காலத்தில்** திடீரென வந்த **ஜலப்பிரளயத்தை** ஒப்பிட்டு விளக்கமளித்தார். சாதாரண வாழ்க்கை தடைபடாமல் நடைபெற்றுக் கொண்டிருந்தது என்பதை விவரிப்பதற்காக, **ஜலப்பிரளத்துக்கு முன்பு** இடம் பெற்ற சில செயல்களையும் விவரித்தார். **குடித்தலும், புசித்தலும்** மிதமிஞ்சினதாக இருந்ததை குறிக்கிற படியால் (யாத்திராகமம் 32:6; மத்தேயு 24:49), இங்கே அது அன்றாட உணவுகளைப் பட்சிப்பதைக் குறிப்பிடுகிறது. **பெண் கொண்டும் பெண் கொடுத்தும்** என்பதும் அன்றாட வாழ்வின் இயல்பையே குறிக்கிறது (22:30ன் விளக்கவுரையைக் காண்க).

**நோவா** பாவம் நிறைந்த ஜனங்களுக்கு பிரசங்கித்து அவர்களுடைய கண் முன்பாகவே **பேழையைக்** கட்டினார் (காண்க ஆதியாகமம் 6:5-7; எபிரெயர் 11:7; 1 பேதுரு 3:20; 2 பேதுரு 2:5), ஆகிலும் எப்பொழுது ஜலப்பிரளயம் உண்டாகும் என்று எவ்விதத்திலும் அவர்கள் அறியாதிருந்தார்கள். அவர்கள் பிழைத்திருக்க ஏதுவாக தங்களை ஆயத்தப்படுத்திக் கொண்டிருந்திருக்க வேண்டியதிருந்தது, மாறாக, அவர்கள் தங்களுடைய வழக்கமான இயல்பு வாழ்க்கையைத் தொடர்ந்து வாழ்ந்து நோவாவின் எச்சரிக்கைகளை அவர் **பேழைக்குள் நுழைந்த நாள் வரை** கண்டு கொள்ளாமல் இருந்தார்கள். மழை பெய்து *பிரளயமாக* தண்ணீர் பெருக்கெடுத்த போது, தங்களின் முடிவுக்கு வருத்தமடைந்திருப்பார்கள் என்பதில் சந்தேகமில்லை.

**வசனங்கள் 40, 41.** இயேசு மறுபடியும் வரும்போது, உலகின் வாழ்வு முறை நோவாகாலத்தில் நடந்தது போலவே நடந்து கொண்டிருக்கும், ஆண்களும் பெண்களும் தங்களுடைய அன்றாட செயல்பாடுகளில் ஈடுபட்டுக் கொண்டிருப்பார்கள். பலஸ்தீனாவின் பொதுவான வாழ்க்கை அனுபவத்தை பயன்படுத்தி, **வயலில் வேலைசெய்யும்** ஆண்களையும் **ஏந்திரம் அரைக்கும்** பெண்களையும் குறித்து இயேசு பேசினார். **இரண்டு ஆண்கள் இரண்டு பெண்களைக்** குறிப்பிட்ட அவர், அவர்களில் **ஒருவர் எடுத்துக்கொள்ளப்படுவார், ஒருவர் கைவிடப்படுவார்** என்றார்.

*"எடுத்துக் கொள்ளப்படுவார்" என்பது (paralambanō) இரட்சிப்பின் நேர்மறைப் பொருளில் அர்த்தங்கொள்ளப்படவேண்டும். வசனம் 39ல், வித்தியாசமான இந்த வார்த்தை airō காணப்படுகிறது, அதாவது துன்மார்க்க சந்ததி எடுத்துக் கொள்ளப்பட்டதைக் குறிப்பிடுகிறது. நோவாவும் அன்று வாழ்ந்து துன்மார்க்கருமான சந்ததி என்று இரண்டு பிரிவு ஜனங்களாகக் குறிப்பிட்டது போலவே இதுவும்: ஆயத்தமாயிருப்போர் (இரட்சிக்கப்பட்டோர்) மற்றும் ஆயத்தமில்லாதோர் (ஆத்துமாவை இழந்தோர்) என்று இருக்கும். இயேசுவின் வருகை ஒருமுழுமையான நிரந்தரப் பிரிவைக் குறிக்கிறது.[3]*

*ஆயிரவருட முன் அரசாட்சி (கிறிஸ்துவின் வருகைக்குமுன்) நடக்கும் என் போரிடமிருந்து மகிழ்ச்சிக்கு "எடுத்துக் கொள்ளப்படுதல்" எனும் உபதேசம் விசேஷமாக 1 தெசலோனிக்கேயர் 4:13-17 லிருந்து தோன்றியுள்ளது. இதற்கான விளக்கமாக மத்தேயு 24:40, 41 ஐப் பயன்படுத்தியுள்ளனர். இந்தக் கண்ணோட்டம் ஏழு வருட உபத்திரவங்களுக்கு முன் இரட்சிக்கப்பட்டவர்கள் (மட்டும்) கர்த்தரோடு கூட எடுத்துக் கொள்ளப்படுவார்கள் என்று எதிர்பார்க்கின்றனர். ஆகிலும், நீதிமான்களை மட்டும் தேவன் எழுப்புவார் என்று புதிய ஏற்பாடு போதிப்பதில்லை (காண்க 1 கொரிந்தியர் 15:50-54; 1 தெசலோனிக்கேயர் 4:13-17). உண்மையில் தேவபக்தியுள்ளவர்கள் எழுப்பப்படும் அதே நேரத்தில் அல்லது நாளில், அவபக்தியுள்ளவர்களும் நியாயத்தீர்ப்பை சந்திக்கும்படி எழுப்பப்படுவார்கள் (யோவான் 5:25-29).*

## *ஆயத்தமாகவே இருங்கள் (24:42-51)*

***42உங்கள் ஆண்டவர் இன்ன நாழிகையிலே வருவாரென்று நீங்கள் அறியாதிருக்கிறபடியினால் விழித்திருங்கள்.***

***43திருடன் இன்ன ஜாமத்தில் வருவானென்று வீட்டெஜமான் அறிந்திருந்தால், அவன் விழித்திருந்து, தன் வீட்டை கன்னமிடவொட்டானென்று அறிவீர்கள்.***

***44நீங்கள் நினையாத நாழிகையிலே மனுஷகுமாரன் வருவார்; ஆதலால், நீங்களும் ஆயத்தமாயிருங்கள்,***

***45ஏற்றவேளையிலே தன் வேலைக்காரருக்குப் போஜனங்கொடுத்து அவர்களை விசாரிக்கும்படி எஜமான் வைத்த உண்மையும் விவேகமுமுள்ள ஊழியக்காரன் யாவன்?***

***46எஜமான் வரும்போது அப்படிச் செய்கிறவனாகக் காணப்படுகிற ஊழியக்காரனே பாக்கியவான்.***

***47தன் ஆஸ்திகள் எல்லாவற்றின்மேலும் அவனை விசாரணைக்காரனாக வைப்பானென்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.***

***48அந்த ஊழியக்காரனோ பொல்லாதவனாயிருந்து: என் ஆண்டவன் வர நாள் செல்லும் என்று தன் உள்ளத்திலே சொல்லிக் கொண்டு,***

***49தன் உடன் வேலைக்காரரை அடிக்கத்தொடங்கி, வெறியரோடே புசிக்கவும் குடிக்கவும் தலைப்பட்டால்,***

***50அந்த ஊழியக்காரன் நினையாத நாளிலும், அறியாத நாழிகையிலும், அவனுடைய எஜமான் வந்து,***

[51]**அவனைக் கடினமாய்த் தண்டித்து, மாயக்காரரோடே அவனுக்குப் பங்கை நியமிப்பான்; அங்கே அழுகையும் பற்கடிப்பும் உண்டாயிருக்கும்.**

***வசனம் 42.*** *இயேசு மீண்டும் எப்பொழுது* ***வருகிறார்*** *என்று பூமியில் ஒருவரும் அறியாதிருக்கிறபடியால்,* ***கர்த்தர்*** *தமது சீஷர்களை* ***ஆயத்தமாயிருக்கும்படி அறிவுறுத்தினார்.*** *ஒலிவமலை உரையாடலில் தமது வருகைக்கு ஆயத்தமாயிருக்கும்படி தம்மைப் பின்பற்றி வருவோருக்கு திருப்பித்திருப்பி அறிவுறுத்துவதைக் கொண்டுள்ளது (24:42, 44, 50; 25:13). கிரேக்க வினைச்சொல் grēgoreō, "எச்சரிக்கையாயிருங்கள்," "கவனமாயிருங்கள்" அல்லது "விழித்திருங்கள்" என்றும் மொழிபெயர்க்கப்படலாம். கெத்சமனே காட்சியில் நித்திரை மயக்கமாயிருந்த தமது சீஷர்களிடம் இயேசு விழித்திருந்து ஜெபம் பண்ணுங்கள் என்று சொன்னதாக கூறப்பட்டிருக்கிறது (26:38, 40, 41).*

***வசனம் 43.*** *தமது இரண்டாம் வருகைக்கு விழித்திருக்க வேண்டியதன் முக்கியத்துவத்தை வலியுறுத்தி இயேசு ஒரு உதாரணத்தைக் கொடுத்தார்:* ***திருடன் இன்ன ஜாமத்திலே வருவான் என்று வீட்டெஜமான் அறிந்திருந்தால், அவன் விழித்திருந்து, தன் வீட்டைக் கன்னமிடவொட்டானென்று அறிவீர்கள்.*** *தன் வீட்டெஜமான் என்று இங்கே குறிப்பிடப்படுகிற கிரேக்க வார்த்தை (oikodespotēs) மத்தேயு சுவிசேஷத்தில் அடிக்கடி, விசேஷமாய் உவமைகளில் காணப்படுகிறது (10:25; 13:27; 20:1, 11; 21:33). இந்த மனுஷன் தன் மனைவி, பிள்ளைகள், மற்றும் வேலைக்காரர்களாகிய, அனைவரும் கொண்ட வீட்டாரனைவருக்கும் பொறுப்பு வகிப்பவன். ஒரு திருடன் எந்த நேரத்தில் வருவான் என்பது அவனுக்குத் தெரிந்திருக்குமானால், அவன் தன்னை ஆயத்தப்படுத்திக் கொள்வான். அவன் விழித்திருந்து, தன்னுடைய வேலைக்காரர்களை காவல் காத்து கண்காணிக்கச் செய்து, அல்லது தனது அயலார்களை தனக்கு உதவ ஒழுங்கு செய்து வைப்பான். "இன்னஜாமத்தில்" என்ற சொற்றொடர் உண்மையில் (இரவின்) எந்த காவல் நேரத்தில் என்று பொருள். யூதருடைய முறைப்படியான காவல் ஜாமங்கள், இரவு நேரம் மூன்று ஜாமங்களாக பிரிக்கப்பட்டிருந்தன, ரோமர் முறைப்படி நான்கு ஜாமங்களாக பிரிக்கப்பட்டிருந்தன (14:25 ற்கான விளக்கவுரையைக் காண்க). "கன்ன மிடுதல்," என்பதன் கிரேக்க வினைச் சொல் diorussō, "துவாரமிட சுவற்றில் இடித்தல்" என்று பொருள். இது ஒரு திருடன் மண்ணால் கட்டப்பட்ட ஒரு சுவற்றில் இடித்து வீட்டிற்குள் செல்ல துவாரமிடுதல் என்பதை பிரதிபலிக்கிறது (6:19, 20ன் விளக்கவுரையைக் காண்க). பின்னர் புதிய ஏற்பாட்டில், இரண்டாம் வருகையை இரவிலே திருடன் வருவதற்கு ஒப்பிடப்பட்டது (1 தெசலோனிக்கேயர் 5:2, 4; 2 பேதுரு 3:10; வெளிப்படுத்தின விசேஷம் 3:3; 16:15).*

***வசனம் 44.*** *இயேசு இந்த உதாரணத்தை தமது வருகைக்கு முன் அறிவிப்பு எதுவுமிருக்காது என்று போதிப்பதற்காகப் பயன்படுத்தினார். இயேசு மறுபடியும் வருகிறார் என்பதை எல்லா ஜனங்களும் உணருவார்கள், ஆனால் யாரும் தனது ஆவிக்குரிய தன்மையை மாற்றிக் கொள்ள நேரமே இல்லாத அளவுக்கு வருகையின் நிகழ்வுகள் இருக்கும். அந்த நேரத்தில், அல்லது* ***அந்த மணிப் பொழுதில்,*** *மிகக் குறைவாக எதிர்பார்ப்பு இருக்கும்போது அவர் மீண்டும் வருவார்.*

***வசனங்கள் 45-47.*** *அடுத்து,* ***ஏற்ற வேளையிலே தன் வேலைக்காரருக்குப் போஜனங்கொடுத்து அவர்களை விசாரிக்கும்படி எஜமான் வைத்த உண்மையும் விவேகமுமுள்ள ஊழியக்காரன் யாவன்?*** *என்று இயேசு கூறினார். வீட்டு "எஜமானனைக்" (kurios) குறித்து பேசிக் கொண்டிருந்தவர் வேலைக்காரருக்கு போஜனங்கொடுக்கும்படி நியமிக்கப்பட்ட ஊழியக்காரனைக் குறித்துப் பேசி கவனத்தைத் திருப்புகிறார். அந்த ஊழியக்காரனுக்கு உள்ள பொறுப்பை இரண்டு வித்தியாசப்பட்ட எண்ணங்களைக் குறிப்பிட்டு சொல்லுகிறார். முதலாவதாக, "உண்மையும் விவேகமுமுள்ள" ஊழியக்காரனாகக் குறிப்பிட்டு, அவன் தனது உக்கிராணத்துவத்தை நல்லது கெட்டது அறிந்தவனாகக் காணுகிறான். இயேசு இந்த ஊழியக்காரன் தனது எஜமானனின் வருகைக்கு தன்னை ஆயத்தப்படுத்திக் கொண்டிருப்பதால் பாக்கியவான் என்றார். அவன் தனக்குள்ள பொறுப்புக்களில் உண்மையுள்ளவனாயிருந்த படியால்,* ***அவனுடைய ஆஸ்திகள் எல்லாவற்றின் மேலும் விசாரனைக்காரனாக*** *அந்த ஊழியனை வைப்பான். கூடுதல் பொறுப்புக்களைப் பெற்றுக் கொள்ளுகிற கருத்து தாலந்துகளைக் குறித்த உவமையில் மீண்டும் காணப்படுகிறது (25:21, 23).*

***வசனங்கள் 48-51.*** *பிறகு இயேசு சொன்னார்,* ***அந்த ஊழியக்காரனோ பொல்லாதவனாயிருந்து: என் ஆண்டவன் வர நாள் செல்லும் என்று தன் உள்ளத்திலே சொல்லிக் கொண்டு,*** *தனது உடன் வேலைக்காரரை அடிக்க தலைப்பட்டால் ... அவனுடைய* ***எஜமானன்*** *இவன்* ***எதிர்பாராத நாளிலே வந்து விடுவான்.*** *ஒரே வேலைக்காரன்தான் வித்தியாசப்பட்ட சூழ்நிலைகளில் இருப்பதைக் குறிக்கக்கூடும். தனது எஜமானன் வர நாள் செல்லும் என்பதை அறிந்த அந்த ஊழியக்காரன் தன் உடன் வேலைக்காரர்களை அடிக்க தொடங்குகிறான் - அவன் யாருக்கு பொறுப்பாளியாக இருக்க வேண்டியவனோ அவர்களையே அடிக்கிறான்! சரியான நேரத்துக்கு அவர்கள் போஜனம் பண்ணினார்களா இல்லையா என்பதை நிச்சயப்படுத்திக் கொள்ள வேண்டிய அவன்* ***வெறியரோடே புசிக்கவும் குடிக்கவும்*** *தலைப்படுகிறான்.*

*எஜமானன் எதிர்பாராத வேளையில் திரும்பி வந்து இந்த ஊழியக்காரனின் வெறுப்பூட்டும் செயலைக் கண்டு, அவனை* ***கடினமாய் தண்டித்து, மாயக்காரரோடே பங்கை நியமிப்பான்,*** *அந்த* ***இடம் அழுகையும் பற்கடிப்புமுள்ளதாக இருக்கும்.*** *கீனரின் கருத்துப்படி, ராஜா, புருஷன், அல்லது எஜமான் புற தேசத்துக்கு பிரயாணமாய் போகிற செயல் பண்டைய உலகில் உவமைகளில் பயன்படுத்தப்பட்ட ஒரு உருவகச் சொல். சில சமயங்களில், இந்த மனுஷர்கள் தங்களுடைய மனைவிகள் மற்றும் வேலைக்காரர்களின் உண்மைத்துவத்தை சோதிக்கும் பொருட்டு நேரமாக முன்னறிவிப்பு எதுவுமின்றி வருவதுண்டு.[4] வீட்டு உறுப்பினர்கள் தங்களுடைய எஜமானனுக்கு உண்மையுள்ளவர்களாய் காணப்படாவிடில் அவர்கள் கடினமாய் தண்டிக்கப்படுவார்கள். ஒரு நபரைத் "துண்டுகளாக்குவது," அல்லது "இரண்டாக பிளப்பது" (NKJV) அன்றைய உலகில் தண்டிக்கப்படுகிற முறை என்று அறியப்பட்டிருந்தது (1 சாமுவேல் 15:33; 2 சாமுவேல் 12:31; தானியேல் 2:5; 3:29; எபிரெயர் 11:37).[5] வசனம் 51ல் சொல்லப்படும், "அழுகையும் பற்கடிப்பும்," மத்தேயு புத்தகத்தில் மற்ற இடங்களில் ஐந்து முறைபயன்படுத்தப்பட்டுள்ளது (8:12; 13:42, 50; 22:13; 25:30) மற்றும்*

லூக்காவில் ஒருமுறை பயன்படுத்தப்பட்டுள்ளது (லூக்கா 13:28).

இங்கே சொல்லப்படும் கதை நியாயத்தீர்ப்பைப் பற்றியது. ஒருவர் கிறிஸ்தவ உக்கிராரணத்துவத்தில் உண்மையுள்ளவராயிருந்தால், அவர் பலனளிக்கப்படுவார். அவர் தனக்கு ஒப்புவிக்கப்பட்டவைகளில் உண்மை யற்றவராயிருந்தால், அவர் தண்டிக்கப்பட்டு "அழுகையும் பற்கடிப்புமான" இடத்திலே தள்ளப்படுவார். உண்மையுள்ள உக்கிராணத்துவம் என்பது கர்த்தருடைய வருகைக்காக விழித்திருந்து ஜெபித்தல்.

✧✧✧✧✧ **பாடங்கள்** ✧✧✧✧✧

## இரண்டாம் வருகை
## *(24:29-31, 36-51)*

இயேசு கிறிஸ்து மறுபடியும் வருகிறார்! இந்த உண்மையில் நாம் நிச்சயமாய் இருக்க முடியும் மேலும், அவரது இரண்டாம் வருகை காட்சி முதலாம் வருகையைக் காட்டிலும் வித்தியாசமாயிருக்கும் என நமக்குத் தெரியும். அவருடைய மறுவருகையின் நேரம் நமக்குத் தெரியாது.

*1. இயேசு வல்லமையோடும் மகிமையோடும் திரும்பி வருவதாக வாக்களித்திருக்கிறார்* (24:29-31). அவர் "வானத்தின் மேகங்கள் மேல் வருவார். வலுவாய்த் தொனிக்கும் எக்காள சத்தத்தோட தமது தூதர்களை அனுப்பி அவரால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களை அவர் கூட்டிச் சேர்ப்பார்."

*2. அவர் மறுபடியும் வரும் போது, அதற்கான அடையாளம் முன்னதாக கொடுக்கப்படுவதில்லை என்று அவர் வாக்களித்திருக்கிறார்* (24:36-41). கர்த்தர் வரும் நாளையோ நாழிகையையோ ஒருவரும் அறியார். நோவா காலத்து வெள்ளம் போல எதிர்பாராத நேரத்தில் அவர் வருவார்.

*3. அவரது வருகை முன்னறிவிக்கப் படாமல் திடீரென இருக்கும் என்று அவர் வாக்களித்தார்* (24:42-44). இரவிலே திருடன் வருகிற விதமாய் அவருடைய வருகை இருக்கும். நாம் ஆயத்தமாயிருக்க வேண்டும், ஏனெனில் அவர் வருவார் என்று நாம் நினையாத நேரத்தில் அவர் வருவார்.

*முடிவுரை.* தமது மறு வருகைக்கு ஜனங்கள் ஆயத்தமாயிருக்கும்படி இயேசு அழைக்கிறார். மத்தேயு 24ம் அதிகாரம் இரண்டு வித ஊழியக்காரனைக் குறித்த உவமையுடன் நிறைவு பெறுகிறது (24:45-51). ஒருவர் "உண்மையும் விவேகமுமான" ஊழியக்காரன், அவன் தனக்கு கொடுக்கப்பட்ட கடமைகளை மிகுந்த கவனமுடன் நிறைவேற்றுகிறான். அடுத்தவன் பொல்லாதவனாயிருந்து உடன் வேலையாட்களை துன்புறுத்தி, தனது எஜமானனுக்குரியவைகளை சுரண்டுகிறவனுமாயிருக்கிறான். அவன் (எஜமானன்) வரும் பொழுது, உண்மையுள்ள ஊழியக்காரனை உயர்த்தி, இன்னும் அதிகமான பொறுப்புக்களை அவனிடத்தில் கொடுக்கிறான். ஆனால், பொல்லாத ஊழியக்காரன் துண்டுகளாக வெட்டப்படுகிறான். கர்த்தருடைய வருகையை எதிர்பார்த்து காத்திருக்கிற, உண்மையுள்ள ஊழியக்காரனா நீங்கள்? இயேசு மீண்டும் வருவதற்கு முன் நீங்கள் அவரிடத்தில் வருவீர்களா?

# இயேசு மறுபடியும் வருகிறார்!
# (24:29-31, 36-51)

*"அர்மெகதோன் யுத்தம்"! "எடுத்து கொள்ளப்படுதல்"! "பூமியில் கிறிஸ்துவின் ஆயிர வருட அரசாட்சி"!*

கடைசி (முடிவு) காலத்தைக் குறித்து கேள்விப்படுவோர் அத்தனைபேரும், ... கீழ் வருகிறவைகளையும் கேள்விப்படுகிறார்கள்.

*அர்மெகதோன் யுத்தம்.* வெளிப்படுத்தின விசேஷத்தில் பேசப்படுகிற கடைசி யுத்தம் ஆவிக்குரிய ஒன்று, சரீரப்பிரகாரமான யுத்தம் அல்ல. கிறிஸ்துவின் சத்துருக்களுக்கு அவருக்கு எதிரான வல்லமை எதுவும் இல்லை. அவர்கள் கிறிஸ்துவுக்கும் அவருடைய வல்லமையுள்ள தூதர்களுக்கும் முன்பாக எதிர்த்து வெற்றிகொள்ள இயலாது (காண்க வெளிப்படுத்தின விசேஷம் 19). "Armageddon" எனும் வார்த்தை "Waterloo" மற்றும் "Pearl Harbor," என்று சொல்லப்படுவது போல ஒரு இடத்தைக் குறிப்பதாக ஆகிவிட்டது. குறிப்பதற்குப்பதிலாக அதற்கு மேலான ஒன்றை முகவுரைப்படுத்துகிறது. "Armageddon" என்பது தீமையான சக்திகளை முழுமையாய், முற்றிலுமாக வீழ்த்துவதுடன் சம்பந்தப்படுத்தப்பட்ட ஒன்று; ஆனால் வெளிப்படுத்தின விசேஷத்தில் சபையை துன்பப்படுத்தின முதல் நூற்றாண்டின் மிகப்பெரிய சக்தியான, ரோம சக்கரவர்த்தியை வீழ்த்துவது குறித்துப் பேசுகிறது.

*எடுத்துக் கொள்ளப்படுதல்.* சபை எடுத்துக்கொள்ளப்படுவது குறித்து, ஆயிர வருட அரசாட்சியாளர்கள் விவரிப்பது போல் திருமறையில் எதுவும் சொல்லப்படுவதில்லை. 1 தெசலோனிக்கேயர் 4:14-16ல், தெசலோனிக்கே பட்டணத்தில் இருந்த கிறிஸ்தவர்களுக்கு கொடுக்கப்படும் தேறுதல், அவர்களோ தங்களால் நேசிக்கப்பட்ட மரித்தவர்கள் கர்த்தருடைய இரண்டாம் வருகையை இழந்து விடுவார்களோ என்ற பயத்தில் இருந்தார்கள். இந்த ஆத்துமாக்கள் மறக்கப்படுவதில்லை, மாறாக அழிவில்லாதவர்களாக எழுந்திருந்து ஆகாயத்தில் கர்த்தரைச் சந்திப்பார்கள்.

*ஆயிர வருட அரசாட்சி.* பூமியில் கிறிஸ்துவின் ஆயிரவருட அரசாட்சியைப் பற்றி என்ன? வெளிப்படுத்தின விசேஷம் 20:4-6ன் வசனப் பகுதி சொல்லாதது என்ன என்பதைக் கவனிக்கவும். அது கிறிஸ்து பூமியிலே ஆளுவதைக் குறிப்பதில்லை, தாவீதின் சிங்காசனத்தில் அமருவதையோ எருசலேமில் ஆளுகை செய்வதையோ குறிப்பிடுவதில்லை; அல்லது அவரது ஆளுகையின் ஆரம்பத்தையோ முடிவையோ பற்றியும் பேசுவதில்லை. ரோம அரசு உபத்திரவப்படுத்தின சபையின் இரத்தசாட்சிகளாய் மரித்த ஆத்துமாக்களின் ஆளுகையைப் பேசுகிறது; "அவர்கள் உயிர்த்து கிறிஸ்துவுடனே கூட ஆயிரம் வருஷம் அரசாண்டார்கள்" (வெளிப்படுத்தின விசேஷம் 20:4). இது எங்கே நடந்தது? பரலோகத்தில் (வெளிப்படுத்தின விசேஷம் 20:1). கிறிஸ்துவின் ஆளுகையின் கால அளவு ஒருபோதும் குறிப்பிடப்படவில்லை; இந்த வசனப்பகுதி சிரச்சேதம் பண்ணப்பட்ட ஆத்துமாக்கள் அவரோடு கூட ஆளுகை செய்வது எவ்வளவு காலம் என்று மட்டும் சொல்லுகிறது.

உலகத்தின் முடிவு வந்து கொண்டிருக்கிறது, ஆனால் "அந்த நாளையும் அந்த நாழிகையையும் என் பிதா ஒருவர் தவிர மற்றொருவனும் அறியான்;

*பரலோகத்திலுள்ள தூதர்களும் அறியார்கள்; குமாரனும் அறியார்" (மத்தேயு 24:36). கிறிஸ்துவின் மறுவருகை திருடனைப் போலிருக்கும் (2 பேதுரு 3:10). அவர் மறுமுறை வரும்பொழுது வானத்தின் மேகங்கள் மேல் வருவார் (மறுபடியும் பூமியிலே கால் வைப்பதில்லை), இந்த உலகம் முற்றிலும் அழிக்கப்படும் (2 பேதுரு 3:10-12). இந்த நிகழ்வுகள் ஒரே நாளில் நடக்கும். நமக்கு முக்கியமானதெல்லாம் "விழித்திருந்து ஜெபிப்பதும்" (26:41) கர்த்தரின் வருகைக்கு ஆயத்தமாயிருப்பதும் தான்.*

*சரீரப் பிரகாரமான அர்மெகதோன் யுத்தம், (சபை) எடுத்துக்கொள்ளப்படுதல், மற்றும் ஆயிர வருடம் பூமியில் கிறிஸ்து ஆட்சி செய்வது குறித்து திருமறை சொல்லுவது என்ன? இதற்கான பதில் "ஒன்றுமில்லை!" என்பதே. திருமறை அர்மெகதோன் எனும் யுத்தத்தைக் குறித்து பேசுகிறது, ஆகிலும் தீர்க்கதரிசிகள் என்று சொல்லிக்கொள்வோர் விவரிப்பது போலல்ல (காண்க வெளிப்படுத்தின விசேஷம் 16:16; 19:11-21). ஜனங்கள் கர்த்தரை "ஆகாயத்தில்" எடுத்துக் கொள்ளப்பட்டு வானத்தின் மேகங்களில் சந்திப்பார்கள் - ஆகிலும் இது ஏதோ சில "பெரிய உபத்திரவத்துக்கு" முன் சபை எடுத்துக் கொள்ளப்படுவதைக் குறிப்பதில்லை (காண்க 1 தெசலோனிக்கேயர் 4:13-18). கிறிஸ்துவால் பூமியிலே ஆயிரவருடம் அரசாட்சி நடக்கும் என்ற உபதேசம் வெளிப்படுத்தின விசேஷம் 20:4-6 ஐ தவறான அடிப்படையில் விளக்கமளித்தலினால் வருகிறது."*

## *ஆயிரவருடமுன் அரசாட்சி உண்மைதானா? (24:29-31, 36-51)*

*இயேசு பூமிக்குத் திரும்பி வந்து பூமிக்குரிய ஒரு ராஜ்யத்தை எருசலேமில் ஸ்தாபிப்பார் என்பது திருமறையின் போதனையை சேதப்படுத்தும் உபதேசம் என்பதற்கு எண்ணற்ற காரணங்கள் உண்டு. இந்தக் கருத்து புறந்தள்ளப்பட வேண்டியது என்பதற்கான சில காரணங்களைப் பரிசீலிப்போம்.*

*1. இது கிறிஸ்து தாம் வாக்குத்தத்தம் பண்ணினபடி தமது ராஜ்யத்தை ஸ்தாபித்தார் என்பதை மறுதலிக்கிறது. ஆயிரவருட முன் அரசாட்சி சொல்லுகிறதாவது (1) தமது ராஜ்யத்தை ஸ்தாபிப்பதற்கான தமது ஊழியத்தில் அவர் தோல்வியுற்றார் (2) சபை ஒரு திடீர் முடிவு, ராஜ்யத்துக்குப் பதிலாக மட்டமாக கொடுக்கப்பட்டது. திருமறை இதற்கு எதிராக போதிக்கிறது (நடபடிகள் 2:36; 1 கொரிந்தியர் 15:24-26; எபேசியர் 1:20-23; கொலோசெயர் 1:13; எபிரெயர் 12:28; வெளிப்படுத்தின விசேஷம் 1:9).*

*2. அது தேவனையும் கிறிஸ்துவையும் கள்ளப்போதகர்களாக்குகிறது (தானியேல் 2:44; மாற்கு 9:1; நடபடிகள் 1:6-8).*

*3. அது இயேசுவின் நாட்களிலிருந்த யூதர்கள் செய்த அதே தவறைச் செய்கிறது. அவர்கள் பூமிக்குரிய ராஜ்யத்தைக் தான் எதிர்பார்த்தார்கள். இயேசு தெளிவாகச் சொன்னார், "என்னுடைய ராஜ்யம் இந்த உலகத்துக்குரியதல்ல" (யோவான் 18:36).*

*4. இந்தக் கோட்பாடு கிறிஸ்து பூமியில் ஆயிரம் வருடம் அரசாட்சி செய்யும்போது தேவனுக்கு கீழ்ப்படிந்து கொள்ளலாம் என்ற தவறான நம்பிக்கையை ஜனங்களுக்குக் கொடுக்கிறது.*

*5.* இந்த உபதேசம் திருமறை தீர்க்கதரிசனத்தை தவறாகப் பயன்படுத்துகிறது, வெளிப்படுத்தின விசேஷத்தில் சொல்லப்பட்டவைகளை நேரடிப் பொருளில் எடுத்துக் கொண்டு, அடையாளச் சொற்களுக்கு அர்த்தம் கொடுக்கப்படுவதால், நிறைவேறின தீர்க்கதரிசனத்தைக் குறித்து ஜனங்களின் மனதில் சந்தேகப்பட வைக்கிறது.

குறிப்புகள்

[1]"குமாரனும் அறியார்" எனும் சொற்றொடர் மத்தேயு புத்தகத்தின் பழங்காலப் பிரதிகள் சிலவற்றில் விடப்பட்டுள்ளது, அநேகமாக இறையியல் கடினத்தினிமித்தமாக இருக்கலாம், இருப்பினும் மாற்கு 13:32ல் சொல்லப்படுவது வாக்குவாதத்தைத் தவிர்க்கிறது. (Bruce M. Metzger, *A Textual Commentary on the Greek New Testament*, 2d ed. [Stuttgart: German Bible Society, 1994], 51–52.) [2]Robert H. Gundry, *Matthew: A Commentary on His Literary and Theological Art* (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1982), 492. [3]Leon Morris, *The Gospel according to Matthew,* Pillar Commentary (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1992), 615. [4]Craig S. Keener, *A Commentary on the Gospel of Matthew* (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1999), 594–95. [5]Homer *Odyssey* 18.339; Livy 8.24.14; Diodorus Siculus 16.16.4; 17.83.9; 33.15.1; Herodotus 2.139; 7.39.